ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2310/64 - 2022 දෙසැම්බර් මස 17 වැනි සෙනසුරාදා - 2022.12.17
*2310/64 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் மினுவாங்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

மினுவாங்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்ததன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், மினுவாங்கொடை நகர சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட மதுகம ஆரச்சிகே கழண லக்மிண மதுகம என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மினுவாங்கொடை நகர சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக சூரிய பதிரன்னெஹெலாகே உபுல் நிலந்த என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

மினுவாங்கொடை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கருணாசிங்ஹ ஜயரத்னகே சம்பத் மாதவ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சூரிய பதிரன்னெஹெலாகே உபுல் நிலந்த என்பவர் மினுவாங்கொடை நகர சபைக்கு உறுப்பினர் ஒருவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கே. ஜே. எஸ். மாதவ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மினுவாங்கொடை நகர சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
2022, திசெம்பர் 16.*

EOG *12 - 0227*

1A - G 38368 — 26 (2022/12)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) பிரிவின் கீழ் ரிதிமாலியத்த பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக ரிதிமாலியத்த பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், ரிதிமாலியத்த பிரதேச சபையின் இலக்கம் 10 குருவிதென்ன வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாபா முதியன்சேலாகே சந்திரிகா சுபாஷினி மாபா என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான திரிமாலியத்த பிரதேச சபையின் இலக்கம் 10 குருவிதென்ன வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திசானாயக முதியன்சேலாகே சோமலதா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

ரிதிமாலியத்த பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கா. காந்தீபன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திசானாயக முதியன்சேலாகே சோமலதா என்பவர் இலக்கம் 10 குருவிதென்ன வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கா. காந்தீபன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ரிதிமாலியத்த பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2022, திசெம்பர் 16.

EOG 12 - 0226